# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி
**அசல் வழக்கு எண்.** 132/2022
**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சித்ரா | தொழில் | |
| க/பெ. | செல்லத்துரை | வயது | 51 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 07.11.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எனது மகனின் பிறப்பு சான்றுதல், கல்லூரி மாற்றுச்சான்றுதல் மற்றும் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவை வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்து தவிர வேறு சொத்துக்கள் இருக்கிறது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கருப்பையா 3ம் பிரதிவாதி அறிவழகனுக்கு செய்துகொடுத்த இனாம் செட்டில்மெண்ட் சாசனம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் என்னை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.
4.நான் நிரூபணவாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு கூட்டுக்குடும்ப சொத்து பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் முறையாக தரப்பினரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வாதி 2ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பங்கு கேட்க எனது மகனுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் தேதி வெள்ளைச்சாமி இறந்தது தொடர்பாக என்னை காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். எல்லாரையும் தான் அழைத்தார்கள். அந்த சமயம் கோட்டையூர் கிராமத்தில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். கோட்டையூரில் உள்ள சொத்துக்களை விற்கும்போது ஊர் பெரியவர்கள் முன்னிலையில் 10 லட்சம் பணம் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.
5. எனக்கு சாட்சிகள் முன்னிலையில் 10 லட்சம் பணம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எனது மகன் தாவா சொத்தை பொறுத்த இனாம் செட்டில்மெண்ட் ரத்துச்செய்ய உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் தற்போது சிங்கப்பூரில் இருக்கிறார்.

**மறுவிசாரணையில்லை.**